**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 4ம் நாள்
**இ.ம.எண். 5/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 289/2019**

சுப்ரமணியன் ..மனுதாரர்/ பிரதிவாதி

//எதிர்//

1. பஜல் முகம்மது (இறந்தார்)
2. மகாதீர் முகம்மது
3. முகம்மது பாரீஸ்
4. முகம்மது அஜ்மல் ..எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 17.11.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ராம்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. E. செல்வராஜ், அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று 20.11.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது மனுதாரரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய போடப்பட்ட 16.10.2025 வாய்தாவை மறுதிறவு செய்ய உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மேற்படி வழக்கில் தனது தரப்பில் முக்கிய சில ஆவணங்களை தாக்கல் செய்ய தற்பொழுது தனக்கு சட்டக்கருத்துரை கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், எனவே, அவைகளை இத்துடன் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாத கால தாமதத்தை மன்னித்து ஆவணங்களை தனது தரப்பில் ஏற்க வேண்டியது அவசியமும், நியாயமாகவும் உள்ளது என்றும், எனவே, தன்னை வாதிகள்

தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய போடப்பட்ட 16.10.2025 வாய்தாவை மறுதிறவு செய்ய உத்தரவிட கோரி தாக்கல் செய்துள்ளார்.

**எதிருரையின் சுருக்கம்:**

3. இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. மேற்படி வழக்கில், குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் Reopen மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாகவும், ஆவணங்கள் தாக்கல் செய்ய தற்போது மனுதாரருக்கு சட்டகருத்துரை கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்கள் மனுதாரர் கட்சியை நிரூபிக்க கூடிய ஆவணங்கள் என்றும், அதனை ஏன் உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல், தற்போது காலதாமதத்துடன் தாக்கல் செய்வதற்கு எவ்வித காரணங்களும் மனுவில் கூறப்படவில்லை என்றும், மனுவில் கூறியுள்ள ஆவணங்கள் அசல் ஆவணங்கள் அல்ல என்றும், அவை சான்றிட்ட நகல்கள் என்றும், அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளதால், மேற்படி ஆவணத்தை பற்றி குறுக்கு விசாரணை செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது என்றும், கிரய ஒப்பந்த ஆவணமானது பதிவு செய்யப்படாத காலாவதியான அசல் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும், மேலும், மேற்படி ஆவணங்கள் தாவா வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றும், 2வது ஆவணத்தில் கால கெடுவை நீட்டித்து கொள்வதாக கூறப்பட்டுள்ள வரவு பொய்யானது என்றும், எனவே, காலதாமத மனுவையும், Receive Documents மனுவையும் ஏற்றுக்கொள்ள போதிய காரணங்கள் இல்லாததால் மேற்படி மனுக்களை இந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை இந்த மனுவை அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:</u>**

5. மனுதாரர் தரப்பில், வழக்கில் தனது தரப்பில் முக்கிய சில ஆவணங்களை தாக்கல் செய்ய தற்பொழுது தனக்கு சட்டக்கருத்துரை

கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், மேற்படி ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாத கால தாமதத்தை மன்னித்து ஆவணங்களை தனது தரப்பில் ஏற்க வேண்டியது அவசியமும், நியாயமாகவும் உள்ளது என்றும், எனவே, மனுதாரரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய போடப்பட்ட 16.10.2025 வாய்தாவை மறுதிறவு செய்ய உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில், ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல், தற்போது காலதாமதத்துடன் தாக்கல் செய்வதற்கு எவ்வித காரணங்களும் மனுவில் கூறப்படவில்லை என்றும், மனுவில் கூறியுள்ள ஆவணங்கள் சான்றிட்ட நகல்கள் என்றும், மேலும் கிரய ஒப்பந்த ஆவணமானது பதிவு செய்யப்படாத காலாவதியான அசல் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும், எனவே, போதிய காரணங்கள் இல்லாததால் மேற்படி மனுக்களை இந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர் தரப்பில், மனுதாரரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய போடப்பட்ட 16.10.2025 வாய்தாவை மறுதிறவு செய்ய உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், போதிய காரணங்கள் இல்லாததால் மேற்படி மனுக்களை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரருக்கு வாதிகள் தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்ப்பு அளித்து இந்த வழக்கினை முடிவு செய்வதே முழுமையான தீர்வாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும் நஷ்டமும் ஏற்படாது எனவே, நீதியின் நலன் கருதி இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8. முடிவாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 20.11.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.11.20 16:33:13 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.11.20 16:33:17 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**